6062



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

21 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- ✼ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✼ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✼ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ✼ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** அருமை என்பது ஒவ்வொரு சமூகத்திலும் மையப் பிரச்சினையாகக் கருதப்படுகின்றது. ஏனெனில்
(1) அது வேலையின்மையையும் பணவீக்கத்தினையும் அதிகரிக்கின்றமையாகும்.
(2) எல்லையற்ற மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கான வளங்கள் சமூகத்தில் வரையறுக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றமையாகும்.
(3) இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசாங்கத்தின் தலையீடு செயற்திறனற்று காணப்படுகின்றமையாகும்.
(4) சமூகத்தின் வரையறுக்கப்படாத மனித விருப்பங்களை பூர்த்தி செய்யக்கூடியளவிற்கு காரணி விளைதிறனை மேம்படுத்துவதற்கு தொழினுட்பத்தினால் முடியாமையாகும்.
(5) அனைத்து வளங்களும் ஓரினத்தன்மை வாய்ந்தனவாக இருப்பதால் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமையாகும்.

**2.** பின்வரும் கூற்றுகளில் எது தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் இடையிலான அடிப்படையான வேறுபாட்டினை சிறப்பாக விளக்குகின்றது?
(1) தேவைகள் காலப்போக்கில் மாற்றமடைகின்றன ஆனால் விருப்பங்கள் மாறாமல் நிலையாக உள்ளன.
(2) தேவைகள் எல்லையற்றவை ஆனால் விருப்பங்கள் வரையறுக்கப்பட்டவை.
(3) தேவைகள் கலாசாரச் செல்வாக்கினால் உருவாவதுடன் விருப்பங்கள் உயிரியல் சார்ந்தவையாகும்.
(4) தேவைகள் எப்போதும் உற்பத்தியாளர்களால் உருவாக்கப்படுகின்றன ஆனால் விருப்பங்கள் நுகர்வோரால் உருவாக்கப்படுகின்றன.
(5) உயிர் வாழ்விற்கு தேவைகள் அவசியமானவை ஆனால் விருப்பங்கள் உயிர்வாழ்வதனைத் தாண்டிய ஆசைகளைப் பிரதிபலிக்கின்றன.

**3.** பின்வருவனவற்றில் ஊழிய விளைதிறனைத் தீர்மானிக்கும் காரணி **அல்லாதது** எது?
(1) கல்வியும் பயிற்சியும்
(2) தொழிலாளர்களின் ஊக்கம்
(3) வேலைவாய்ப்பு வீதத்தின் அதிகரிப்பு
(4) மேம்பட்ட தொழில்நுட்பத்தின் கிடைப்பனவு
(5) வேலை நேரத்தினை அதிகரித்தல்

**4.** பொருளாதாரம் தொடர்ந்தும் அதே புள்ளியில் உற்பத்தி செய்யும் போதிலும் கூட உற்பத்தி சாத்திய வளையியின் வெளிப்புறம் நோக்கிய நகர்வினால் குறிப்பிடப்படுவது
(1) காரணி ஒதுக்கீட்டு வினைத்திறனில் ஏற்பட்ட முன்னேற்றமாகும்.
(2) உற்பத்தி வினைத்திறனில் ஏற்பட்ட முன்னேற்றமாகும்.
(3) வினைத்திறனில் முன்னேற்றம் இல்லாமல் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியாகும்.
(4) அமையச் செலவில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சியாகும்.
(5) பொருளாதாரம் அதன் இயலளவிற்கு அப்பால் உற்பத்தி செய்வதாகும்.


[பக். 2 ஐப் பார்க்க

5. ஒரு சாதாரண பொருளுக்கான கேள்வி வளையி கீழ்நோக்கிச் சரிந்து செல்வதற்கான காரணம் யாதெனில்
(1) வருமானம் மற்றும் பதிலீட்டு விளைவுகள் கேள்வித் தொகையினை ஒரே திசையில் நகர்த்துகின்றமையாகும்.
(2) வருமானத்தில் ஏற்பட்ட ஒரு அதிகரிப்பினால் நுகர்வோன் பொருளுக்கான நுகர்வினைக் குறைக்கின்றமையாகும்.
(3) வருமான விளைவு பதிலீட்டு விளைவினை விடவும் ஆதிக்கம் செலுத்துகின்றமையாகும்.
(4) பதிலீட்டு விளைவு வருமான விளைவினை விடவும் ஆதிக்கம் செலுத்துகின்றமையாகும்.
(5) வருமான விளைவானது கேள்வித் தொகையினை பதிலீட்டு விளைவின் எதிர்த்திசைக்கு நகர்த்துகின்றமையாகும்.

6. X பொருளின் விலை குறைவடையும் போது பெரும்பாலும் X பொருளுக்கான சந்தையில் ஏற்படக்கூடிய சாத்தியமான விளைவு யாதெனில்
(1) X பொருளுக்கான நிரம்பல் வீழ்ச்சியடையும்.
(2) X பொருளுக்கான கேள்வி அதிகரிக்கும்.
(3) கேள்வி வீழ்ச்சியடைவதுடன் நிரம்பல் அதிகரிக்கும்.
(4) X பொருளுக்கான கேள்வித் தொகை அதிகரிக்கும்.
(5) X பொருளுக்கான நிரம்பல் தொகை அதிகரிக்கும்.

7. நிரம்பல் விதியினால் குறிப்பிடப்படுவது யாதெனில்
(1) ஏனையவை மாறாத நிலையில் விலை அதிகரிக்கும் போது நிரம்பல் தொகை அதிகரிக்கும் என்பதாகும்.
(2) ஏனையவை மாறாத நிலையில் விலை வீழ்ச்சியடைகின்ற போது நிரம்பல் தொகை அதிகரிக்கும் என்பதாகும்.
(3) ஏனையவை மாறாத நிலையில் விலை அதிகரிக்கும் போது நிரம்பல் தொகை வீழ்ச்சியடையும் என்பதாகும்.
(4) விலை அதிகரிக்கும் போது நிரம்பல் வளையி வலப்புறம் நகரும் என்பதாகும்.
(5) விலை வீழ்ச்சியடைகின்ற போது நிரம்பல் வளையி வலப்புறம் நகரும் என்பதாகும்.

8. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள X மற்றும் Y பொருட்களுக்கான சமாந்தரமான இரண்டு கேள்வி வளையிகள் தொடர்பில் மிகச் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) X மற்றும் Y ஆகிய இரு வளையிகளும் பூச்சியமல்லா ஒவ்வொரு விலையிலும் அலகு நெகிழ்ச்சியைக் கொண்டுள்ளன.
(2) X மற்றும் Y ஆகிய இரு வளையிகளும் ஒவ்வொரு பூச்சியமல்லா விலையிலும் சமமான நெகிழ்ச்சியைக் கொண்டுள்ளன.
(3) ஒவ்வொரு பூச்சியமல்லா விலையிலும் X வளையியானது Y வளையியினை விடவும் கூடிய விலை நெகிழ்ச்சியைக் கொண்டுள்ளது.
(4) ஒவ்வொரு பூச்சியமல்லா விலையிலும் Y வளையியானது X வளையியினை விடவும் கூடிய விலை நெகிழ்ச்சியைக் கொண்டுள்ளது.
(5) X பொருளானது Y பொருளை விடவும் மிகக் குறைந்த பதிலீட்டுப் பொருட்களைக் கொண்டிருக்கக் கூடும்.




9. எலுமிச்சைக்கான சந்தைக் கேள்விச் சார்பு $Q_D = 150 - 2P$ எனவும் சந்தை நிரம்பல் சார்பு $Q_S = -60 + 5P$ எனவும் கருதுக. சந்தைச் சமநிலையில் சமநிலைத் தொகை மற்றும் பொருளாதார மிகை யாது?

| | சமநிலைத் தொகை | பொருளாதார மிகை |
|---|---|---|
| (1) | 30 | 2 835 |
| (2) | 90 | 2 700 |
| (3) | 30 | 2 025 |
| (4) | 90 | 945 |
| (5) | 90 | 2 835 |

அ.பொ.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න


**10.** ஒரு நிறுவனம் தனது உற்பத்தியின் விலையை குறைத்த பின்பு விற்பனைத் தொகை 100 அலகுகளிலிருந்து 130 அலகுகளாக அதிகரித்த போதிலும் மொத்த வருவாய் வீழ்ச்சியடைந்ததை அவதானித்தது. இது குறிப்பது யாதெனில் இந்நிலைமையின் கீழ் விலைக் கேள்வி நெகிழ்ச்சியானது அண்ணளவாக

(1) - 0.8 ஆகும் என்பதாகும்.
(2) - 1.0 ஆகும் என்பதாகும்.
(3) - 1.3 ஆகும் என்பதாகும்.
(4) - 1.5 ஆகும் என்பதாகும்.
(5) முடிவிலி என்பதாகும்.

**11.** ஒரு பொருளின் சந்தைக் கேள்வி $Q_D = 230 - 4P$ எனவும் சந்தை நிரம்பல் $Q_S = -70 + 6P$ எனவும் கருதுக. ஒவ்வொரு அலகிற்குமான சந்தை விலை ரூபா 50 எனின், சந்தையில் சமநிலையின்மை ஏற்படுவதுடன் அதன் விளைவாக

(1) 30 அலகுகள் மிகை கேள்வி ஏற்படும்.
(2) 120 அலகுகள் மிகை நிரம்பல் ஏற்படும்.
(3) 200 அலகுகள் மிகை நிரம்பல் ஏற்படும்.
(4) 230 அலகுகள் மிகை கேள்வி ஏற்படும்.
(5) 230 அலகுகள் மிகை நிரம்பல் ஏற்படும்.

**12.** ஒரு கிலோகிராமிற்கான சந்தை விலை 100 ரூபாவாகவும் விற்கப்பட்ட தொகை 1 500 கிலோ கிராமாகவும் கொண்ட ஒரு விவசாயப் பொருளுக்கான ஆரம்ப சந்தை சமநிலையினை வரைபடம் காட்டுகின்றது.




ஒரு கிலோ கிராமிற்கான சந்தை விலையினை ரூபா 125 ஆக அதிகரிப்பதற்கு அரசாங்கம் விரும்பினால் அதற்காக அரசாங்கம் எவ்வளவு தொகையினை செலவிட நேரிடும்?

(1) ரூபா 12 500
(2) ரூபா 62 500
(3) ரூபா 125 000
(4) ரூபா 150 000
(5) ரூபா 182 500

**13.** மென்பானங்கள் மீது 10% விசேட பண்ட வரியினை அரசாங்கம் விதித்ததாக கருதுக. இதனால் மென்பானங்களின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு பிரதானமாக நுகர்வோனால் செலுத்தப்படுகின்றதேயன்றி உற்பத்தியாளனால் அன்று. பெரும்பாலும் இவ்வாறு நடப்பதற்கான காரணம் யாது?

(1) கேள்வியின் விலை நெகிழ்ச்சி நிரம்பலின் விலை நெகிழ்ச்சியினை விடவும் அதிகமாக இருந்துள்ளது.
(2) கேள்வியின் விலை நெகிழ்ச்சி நிரம்பலின் விலை நெகிழ்ச்சியினை விடவும் குறைவாக இருந்துள்ளது.
(3) நிரம்பல் விலை நெகிழ்ச்சியற்றதாகவும் கேள்வி விலை நெகிழ்ச்சி உள்ளதாகவும் இருந்துள்ளது.
(4) நிரம்பலின் விலை நெகிழ்ச்சி ஒன்றை விடக் குறைவாக இருந்துள்ளது.
(5) கேள்வியின் விலை நெகிழ்ச்சி அலகு நெகிழ்ச்சியாக இருந்துள்ளது.

**14.** தாராள சந்தை சமநிலை விலைக்கு மேலாக அதிகபட்ச விலையினை அரசாங்கம் விதிக்குமானால் அது நுகர்வோர் மிகை மீதும் உற்பத்தியாளர் மிகை மீதும் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்?

| | நுகர்வோர் மிகை | உற்பத்தியாளர் மிகை |
|---|---|---|
| (1) | வீழ்ச்சியடையும் | அதிகரிக்கும் |
| (2) | அதிகரிக்கும் | வீழ்ச்சியடையும் |
| (3) | வீழ்ச்சியடையும் | நிர்ணயிக்க முடியாது |
| (4) | அதிகரிக்கும் | மாற்றமில்லை |
| (5) | மாற்றமில்லை | மாற்றமில்லை |

**15.** ஒரு கைத்தொழிலில் நான்கு பெரிய நிறுவனங்கள் மொத்த சந்தை வெளியீட்டில் 90% இனை உற்பத்தி செய்யுமானால் இச்சந்தை

(1) ஒரு தனியுரிமைப் போட்டிச் சந்தையாகும்.
(2) ஒரு தூய தனியுரிமையாகும்.
(3) நிறை போட்டிச் சந்தையாகும்.
(4) சிலருரிமைச் சந்தையாகும்.
(5) இயற்கைத் தனியுரிமைச் சந்தையாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

**16.** கீழுள்ள அட்டவணையானது குறுங்காலத்தில் தொழிற்படும் ஒரு நிறுவனத்தின் பல்வேறு வகையான செலவுகள் பற்றிய சில தகவல்களைக் காட்டுகின்றது.

| வெளியீடு (அலகுகள்) | மொத்த மாறும் செலவு (ரூபா) | மொத்த நிலையான செலவு (ரூபா) | மொத்த செலவு (ரூபா) | சராசரி மொத்தச் செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| 0 | 0 | 140 | | |
| 1 | | | 260 | |
| 2 | | | | 170 |

மேலுள்ள தகவல்களின் படி, வெளியீட்டின் இரண்டாவது அலகினை நிறுவனம் உற்பத்தி செய்யும்போது சராசரி மாறும் செலவு மற்றும் எல்லைச் செலவினை உள்ளடக்கிய விடையினை தெரிவுசெய்க.

| | சராசரி மாறும் செலவு (ரூபா) | எல்லைச் செலவு (ரூபா) |
|---|---|---|
| (1) | 80 | 100 |
| (2) | 100 | 80 |
| (3) | 100 | 120 |
| (4) | 120 | 80 |
| (5) | 130 | 100 |

**17.** ஒரு நிறைப்போட்டிக் கைத்தொழிலிலுள்ள எல்லா நிறுவனங்களும் குறுங்காலத்தில் இலாபத்தினை உச்சப்படுத்திய போதும் தொடர்ந்தும் நட்டத்தினை அனுபவிக்குமாயின் இது குறித்துக் காட்டுவது,
(1) எல்லைச் செலவு எல்லை வருமானத்தினை விட அதிகரித்துக் காணப்படுகின்றது.
(2) விலை எல்லைச் செலவுக்கு சமனாகக் காணப்படுகின்றது ஆனால் அது சராசரி மொத்தச் செலவுக்கு மேலாக உள்ளது.
(3) விலை எல்லைச் செலவுக்கு சமனாக உள்ளது ஆனால் அது சராசரி மொத்தச் செலவை விட குறைவாக உள்ளது.
(4) மொத்தச் செலவு மொத்த வருமானத்திற்கு சமனாகக் காணப்படுகின்றது.
(5) மொத்த மாறும் செலவு மொத்த வருமானத்தினை விட அதிகமாக உள்ளது.

**18.** பின்வரும் காரணிகளின் மொத்த வருவாய்களில் எது பெரும்பாலும் மாற்றல் உழைப்புகளை மட்டும் உள்ளடக்கியுள்ளது?
(1) கொழும்பு நகரத்திலுள்ள ஒரு காணித்துண்டு
(2) உலகத்தரம் வாய்ந்த ஒரு கிரிக்கெட் விளையாட்டு வீரர்
(3) ஒரு தனித்துவமான தாதுப்பொருள் படிவு
(4) ஒரு காப்புரிமையுள்ள கண்டுபிடிப்பு
(5) ஒரு சாதாரண எழுதுவினைஞர்

**19.** ஒரு பொருளாதாரம் எதிர்க்கணிய வெளியீட்டு இடைவெளிக்குள் பிரவேசித்தால் பெரும்பாலும் பின்வருவனவற்றுள் எது அதிகரிக்கும்?
(1) மொத்தக் கேள்வி
(2) வேலையின்மை வீதம்
(3) வணிக நம்பிக்கை
(4) பொருளாதார வளர்ச்சி வீதம்
(5) பணவீக்க வீதம்

**20.** தேசிய வருமானக் கணிப்பீட்டில் உற்பத்தி வரம்பிலிருந்து விலக்கப்படுவது?
(1) சீவனோபாய விவசாயம்
(2) உரிமையாளர் தாம் வசிக்கும் வீட்டின் மீது கணிப்பிடப்பட்ட வாடகை
(3) ஒரு தொண்டு நிறுவனத்திற்கான தன்னார்வ சேவை
(4) போதைப் பொருட்களின் சட்டவிரோத உற்பத்தி
(5) அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்படும் சேவைகள்

**21.** தேசிய வருமானக் கணிப்பீட்டில் மத்திய வங்கி உள்ளடங்கும் நிறுவனத்துறை எது?
(1) நிதிக் கூட்டுத்தாபனங்கள்
(2) நிதி சாராக் கூட்டுத்தாபனங்கள்
(3) அரச துறை
(4) வீட்டுத்துறையினர்
(5) வீட்டுத் துறையினருக்குச் சேவை செய்யும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள்

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**22.** பின்வரும் கூற்றுகளில் எது உற்பத்தி பொருள்கள் மீதான வரிகளை உற்பத்தி மீதான ஏனைய வரிகளிலிருந்து சிறப்பாக வேறுபடுத்துகின்றது?

(1) பொருள்கள் மீதான வரிகள் உள்ளீட்டுச் செலவுகளை அடிப்படையாகக் கொண்டவை உற்பத்தி மீதான ஏனைய வரிகள் இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டவை.

(2) பொருள்கள் மீதான வரிகள் பொருள்கள் மற்றும் சேவைகளின் பெறுமதி அல்லது தொகையுடன் தொடர்புடைய அதேவேளை உற்பத்தி மீதான ஏனைய வரிகள் நிலம், கட்டிடம் போன்ற உற்பத்திக் காரணிகள் மீது விதிக்கப்படுகின்றன.

(3) பொருள்கள் மீதான வரிகள் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் என்பவற்றுடன் மட்டும் தொடர்புடைய அதேவேளை உற்பத்திகள் மீதான வரிகள் உள்நாட்டு உற்பத்தியுடன் மட்டும் தொடர்புடையவை.

(4) பொருள்கள் மீதான வரிகள் எப்போதும் நேர் வரிகளாகக் காணப்படுகையில் உற்பத்திகள் மீதான ஏனைய வரிகள் எப்போதும் நேரில் வரிகளாகக் காணப்படுகின்றன.

(5) பொருள்கள் மீதான வரிகள் மத்திய அரசாங்கத்தால் சேகரிக்கப்படும் அதேவேளை உற்பத்தி மீதான ஏனைய வரிகள் உள்ளூராட்சி சபைகளால் சேகரிக்கப்படுகின்றன.


**23.** எளிய கெயின்சிய மாதிரியில் மொத்தச் செலவுச் சார்பின் சரிவு தீர்மானிக்கப்படுவது

(1) எல்லைச் சேமிப்பு நாட்டத்தினூடாகவாகும்.
(2) சராசரி சேமிப்பு நாட்டத்தினூடாகவாகும்.
(3) சராசரி நுகர்வு நாட்டத்தினூடாகவாகும்.
(4) எல்லை நுகர்வு நாட்டத்தினூடாகவாகும்.
(5) தன்னிச்சையான நுகர்வு மட்டத்தினூடாகவாகும்.

**24.** மாற்றல் கொடுப்பனவுகள் ரூபா 100 மில்லியனால் அதிகரிக்கும் போது தேசிய வருமானம் ரூபா 300 மில்லியனால் அதிகரித்தால் அதன் விளைவாக எல்லை சேமிப்பு நாட்டத்தின் பெறுமானம் யாது?

(1) 0.25 (2) 0.4 (3) 0.75 (4) 0.8 (5) 0.85

**25.** வரைபடமானது பொருளாதாரத்தின் மொத்த செலவீடுகளையும் மெய்த்தேசிய வருமானத்தையும் காட்டும் அதேவேளை அப்பொருளாதாரத்தில் வெளிநாட்டுத்துறை காணப்படவில்லை எனவும் அரசாங்க கொள்வனவுகள் ஆரம்பத்தில் பூச்சியமாக காணப்படுவதாகவும் கருதப்படுகின்றது.




நிறைதொழில் மட்ட தேசிய வருமானமாகிய ரூபா 800 மில்லியனை அடைவதற்கு தேவைப்படும் அரசாங்க கொள்வனவின் குறைந்தபட்ச அதிகரிப்பு

(1) 100 மில்லியன் ரூபாவாகும்.
(2) 160 மில்லியன் ரூபாவாகும்.
(3) 200 மில்லியன் ரூபாவாகும்.
(4) 500 மில்லியன் ரூபாவாகும்.
(5) 800 மில்லியன் ரூபாவாகும்.

**26.** மையப் பணவீக்கம் மிகச் சரியாக விபரிக்கப்படுவது

(1) மொத்த உள்நாட்டு உற்பத்தி சுருக்கியின் மூலம் அளவிடப் பணவீக்கத்தினாலாகும்.
(2) நுகர்வோர் விலைகளின் எல்லா மாறிகளையும் உள்ளடக்கிய பணவீக்கத்தினாலாகும்.
(3) உணவு, வலுச்சக்தி போன்ற அடிக்கடி விலைமாறக்கூடிய வகைகளை அகற்றிய பணவீக்கத்தினாலாகும்.
(4) நாணய மாற்று வீத மாற்றங்களுக்காக சீராக்கப்பட்ட பணவீக்கத்தினாலாகும்.
(5) அத்தியாவசிய உணவுப் பொருள்களின் உற்பத்தியாளர் விலைகள் மூலம் அளவிடப்படும் பணவீக்கத்தினாலாகும்.

[பக். 6 ஐப் பார்க்க

27. மத்திய வங்கியால் மேற்கொள்ளப்படும் திறந்த சந்தை கொள்வனவுகள் வழமையாக
(1) பொருளாதாரத்தின் பண அடித்தளத்தை குறைக்கும்.
(2) கடன் வழங்கலின் போது அறவிடப்படும் வட்டி வீதத்தை அதிகரிப்பதற்கு வணிக வங்கிகளை நிர்ப்பந்திக்கும்.
(3) வைப்புகளை குறைப்பதனால் பணவீக்கத்தை குறைக்கும்.
(4) பணச் சந்தையில் திரவத்தன்மையை குறைக்கும்.
(5) வணிக வங்கிகளின் ஒதுக்குகளையும் பணவாக்கம் செய்யும் ஆற்றலையும் அதிகரிக்கும்.

28. பின்வருவனவற்றுள் பொருளாதாரத்தில் பணத்தின் பரிமாற்ற நோக்கத்திற்கான கேள்வி பெரும்பாலும் அதிகரிப்பது
(1) சந்தை வட்டி வீதத்தில் ஏற்படும் அதிகரிப்பினாலாகும்.
(2) நாளாந்த கொடுக்கல் வாங்கல்களில் டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகளை அதிகளவில் பயன்படுத்தலினாலாகும்.
(3) உயர் வட்டி வீதம் காரணமாக முறிகளின் விலை குறைதலினாலாகும்.
(4) பெயரளவுத் தேசிய வருமானத்தின் அதிகரிப்பினாலாகும்.
(5) பங்குச் சந்தையில் நிலவும் உயர் அளவிலான நிச்சயமற்ற மற்றும் நிலையற்ற தன்மையினாலாகும்.

29. வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன் சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்துவது
(1) வணிக வங்கிகளுக்கிடையே கடன் வழங்கலின் போது அறவிடப்படும் நீண்டகால வட்டி வீதமாகும்.
(2) பிணையின்றி வணிக வங்கிகளிடையே ஓரிரவு நிதிகளைக் கடன் பெறுவதற்காக அறவிடப்படும் குறுங்கால வட்டி வீதமாகும்.
(3) பணச் சந்தையில் வெளியிடப்படும் குறுங்கால திறைசேறி உண்டியல்களுக்காக அரசாங்கம் செலுத்தும் வட்டி வீதமாகும்.
(4) வணிக வங்கிகள் சேமிப்பு மற்றும் நிலையான வைப்புகளுக்கு வைப்பாளருக்கு வழங்கும் வட்டி வீதமாகும்.
(5) மத்திய வங்கியின் துணை நில் கடன் வசதி மற்றும் துணை நில் வைப்பு வசதிகளின் மூலம் பிரதிபலிக்கப்படும் சராசரி கொள்கை வட்டி வீதமாகும்.

30. ஒரு வணிக வங்கியில் மிகை ஒதுக்குகள் ரூபா 10 000 ஆகவும், தேவைப்படும் ஒதுக்குவீதம் 10% ஆகவும் உள்ளதெனக் கருதுக. இந்நிலையில் வணிக வங்கி முறைமை பெறக்கூடிய மொத்த சாத்தியமான வைப்புகளின் அதிகரிப்பின் அளவு யாது?
(1) ரூபா 9 000 (2) ரூபா 10 000 (3) ரூபா 90 000 (4) ரூபா 100 000 (5) ரூபா 120 000

31. ஒரு பொதுப் பொருளை ஒரு மேன்மைப்பொருளில் இருந்து சிறப்பாக வேறுபடுத்தி இனங்காணப் பயன்படும் கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) பொதுப் பொருள் நுகர்விலிருந்து பணம் செலுத்தாதோரை விலக்கிவைக்க முடியும் அதேவேளை மேன்மைப் பொருள் தொடர்பில் அவ்வாறு செய்ய முடியாமையாகும்.
(2) மேன்மைப் பொருள்கள் தனியார் துறையினால் மாத்திரம் வழங்கப்படும் அதேவேளை பொதுப் பொருளை தனியார் மற்றும் அரசாங்கம் ஆகிய இரு துறைகளும் வழங்கும்.
(3) மேன்மைப் பொருள்கள் எதிர்கணிய வெளிவாரிகளை உருவாக்குவதுடன் பொதுப்பொருள்கள் நேர்கணிய வெளிவாரிகளை உருவாக்கும்.
(4) பொதுப் பொருளை நுகரும்போது போட்டித்தன்மை மற்றும் விலக்கிவைக்க முடியாத தன்மை காணப்படாத அதேவேளை மேன்மைப் பொருளுக்கு போட்டித்தன்மை காணப்படுவதுடன் விலக்கி வைக்கவும் முடியும்.
(5) மேன்மைப் பொருள்கள் நேர்க்கணிய வெளிவாரிகளை உருவாக்கும் அதேவேளை பொதுப்பொருள்கள் எதிர்க்கணிய வெளிவாரிகளை உருவாக்கும்.

32. அரசாங்கத்தின் தோல்விக்கு ஓர் உதாரணமாக பின்வரும் எச்சந்தர்ப்பத்தைக் குறிப்பிடலாம்?
(1) புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்திற்காக வழங்கப்படும் ஒரு மானியம் காபன் வெளியேற்றத்தை குறைக்கும் அதேவேளை நலனை மேம்படுத்தும்.
(2) அத்தியாவசியப் பொருள்கள் மீது விதிக்கப்படும் விலைக்கட்டுப்பாடு, பொருள் தட்டுப்பாடு மற்றும் கறுப்புச் சந்தையை உருவாக்கும்.
(3) விருத்திமுறை வரிவிதிப்பு வருமான ஏற்றத்தாழ்வுகளை குறைக்கும்.
(4) அரசாங்கத்தினால் கல்வி வழங்கப்படுதல் உயர் எழுத்தறிவு வீதத்திற்கு வழிவகுக்கின்றது.
(5) பணக்கொள்கையானது பணவீக்கத்தை இலக்கிடப்பட்ட மட்டத்தில் உறுதிப்படுத்துகின்றது.

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**33.** பின்வருவனவற்றுள் அரசாங்கத்தின் முதனிலைச் செலவுகளின் ஒரு உட்பிரிவு அல்லாதது எது?
(1) அரச துறை ஊழியர்களின் சம்பளங்கள்
(2) அரச கடன் மீதான வட்டிச் செலுத்தல்கள்
(3) கல்வி மீதான அரசாங்க செலவினம்
(4) வீட்டுத்துறைக்கு வழங்கப்படும் நடைமுறை மாற்றல்களும் மானியங்களும்
(5) உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கான மூலதனச் செலவுகள்

**34.** குறைநிலைப் பாதீட்டு நிதியிடலின் வெளித்தள்ளுகை விளைவை விபரிப்பது
(1) அரச செலவீடுகள் உயர் தனியார் நுகர்வுக்கு வழிவகுக்கின்றது.
(2) வரிக்குறைப்பு தனியார் துறையின் கடன் பெறல் அதிகரிக்க காரணமாகும்.
(3) அதிகளவு அரச படுகடன் காரணமாக தனியார் முதலீடுகள் வீழ்ச்சியடைவதாகும்.
(4) தனியார் துறைக்கு முறிகளை விற்பனை செய்வதன் மூலம் அரச செலவீட்டிற்கு அவசியமான பணத்தை பெற்றுக் கொள்ளுதலாகும்.
(5) அரசாங்க படுகடன் பெறல் காரணமாக அதிகரிக்கும் வட்டி வீதம் பணவீக்கம் வேகமாக அதிகரிக்க வழிவகுக்கிறது.

**35.** இலங்கைக்கான மிகப்பெரிய கடன் வழங்குநர்
(1) சர்வதேச நாணய நிதியம்
(2) சர்வதேச இறைமைக் கடன் முறி உரிமையாளர்கள்
(3) பரீஸ் கழகத்தின் பங்காளி நாடுகள்
(4) உலக வங்கி
(5) இருதரப்பு கடன் வழங்குனர்கள்

**36.** அரிசி மற்றும் புடைவை ஆகிய இரு பொருள்களையும் B நாட்டை விட கூடிய வினைத்திறனுடன் A நாட்டினால் உற்பத்தி செய்ய முடியுமாயினும் B நாட்டுக்கு புடைவை உற்பத்தியில் A நாட்டை விட குறைவான அமையச் செலவு காணப்படுமாயின்
(1) A நாட்டிற்கு அரிசி உற்பத்தியில் முழு நன்மையும் ஒப்பீட்டு நன்மையும் காணப்படும்.
(2) B நாட்டில் ஆடை உற்பத்தியில் முழு நன்மையும் ஒப்பீட்டு நன்மையும் காணப்படும்.
(3) A நாடு புடைவை உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி அடைய வேண்டும்.
(4) B நாடு வர்த்தகத்தின் மூலம் நன்மை பெறமுடியாது.
(5) வர்த்தகத்திற்கான எந்த அடிப்படையையும் காண முடியாதுள்ளது.

**37.** தரப்பட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு நாட்டின் ஏற்றுமதி விலைச்சுட்டெண் 120 ஆகவும் இறக்குமதி விலைச் சுட்டெண் 150 ஆகவும் ஏற்றுமதி தொகைச் சுட்டெண் 110 ஆகவும் காணப்பட்டது. இந்நாட்டின் வருமான வர்த்தகமாற்று விகிதமானது
(1) 80.0 (2) 88.0 (3) 132.5 (4) 137.5 (5) 165.0

**38.** பின்வருவனவற்றில் பிராந்திய அனைத்தும் உள்ளடக்கப்பட்ட பொருளாதார கூட்டமைப்பின் (RCEP) அங்கத்தவர் அல்லாத நாடு எது?
(1) சீனா (2) தென் கொரியா
(3) அவுஸ்திரேலியா (4) இந்தோனேசியா
(5) இந்தியா

**39.** பின்வருவனவற்றுள் இலங்கையின் சென்மதி நிலுவையின் முதலாந்தரக் கணக்கில் உள்ளடக்கப்படாதது எது?
(1) வெளிநாட்டினருக்கு சொந்தமாகவுள்ள அரசாங்க முறிகள் மீது மேற்கொள்ளப்படும் வட்டிக் கொடுப்பனவுகள்
(2) வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்களால் அவர்கள் நாட்டிற்கு அனுப்பப்படும் இலாபங்கள்
(3) இலங்கையினால் வெளிநாடுகளில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து கிடைக்கும் பங்கு இலாபங்கள்
(4) ஒரு வருடத்திற்கு உட்பட்ட காலப்பகுதியில் வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் பெற்ற சம்பளங்கள்
(5) இருதரப்பு பங்காளர்களிடமிருந்து பெற்ற நீண்டகால சலுகைக் கடன்கள்

PAST PAPERS WIKI

[பக். 8 ஐப் பார்க்க

**40.** இலங்கையின் உத்தியோகப்பூர்வ வெளிநாட்டு ஒதுக்குகளின் பிரதான கூறுகளாவன

(1) வெளிநாட்டு நேரடி முதலீடுகள், சிறப்பு எடுப்பனவு உரிமை மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புகளாகும்.
(2) தங்கம், வெளிநாட்டு நாணயச் சொத்துகள் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமை ஆகியனவாகும்.
(3) இறைமைக் கடன் முறிகள், சிறப்பு எடுப்பனவு உரிமை மற்றும் வெளிநாட்டிலிருந்தான பணவனுப்பல்கள் என்பனவாகும்.
(4) உள்நாட்டு வங்கி வைப்புகள், சிறப்பு எடுப்பனவு உரிமை மற்றும் தங்க ஒதுக்குகள் என்பனவாகும்.
(5) ஏற்றுமதி சம்பாத்தியங்கள், தங்கம் மற்றும் அரச பிணைப் பத்திரங்கள் என்பனவாகும்.

**41.** ஒரு நாடு தனது வர்த்தகப் பங்காளர்களுடன் ஒப்பிடுமிடத்து உயர்ந்த பணவீக்கத்தை அனுபவிக்குமாயின் அதனால் பெரும்பாலும் ஏற்படக்கூடிய விளைவு

(1) உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி அதிகரிப்பதாகும்.
(2) நாணயமாற்று வீதத்தில் குறிப்பிடத்தக்களவு மாற்றம் ஏற்படாமையாகும்.
(3) உள்நாட்டு நாணயம் நீண்ட காலத்தில் வலுவடைவதாகும்.
(4) உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி தேய்வடைவதாகும்.
(5) வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிப்பதாகும்.

**42.** வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் இருந்து தமது பட்டியல் முதலீடுகளை விலக்கிக்கொள்ளும் போது அதன் ஒரு விளைவாக ஏற்படுவது

(1) மூலதனக் கணக்கில் பதியப்படும் மூலதன மாற்றல்கள் குறைவடையும்.
(2) நடைமுறைக்கணக்கில் பதியப்படும் தேறிய ஏற்றுமதிகள் அதிகரிக்கும்.
(3) நிதிக்கணக்கில் பதியப்படும் நிதிகள் வெளிநோக்கிப் பாயும்.
(4) ஒட்டு மொத்தமாக சென்மதி நிலுவையின் நிலை மேம்படும்.
(5) முதனிலை வருமானக் கணக்கில் பதியப்படும் மீள்முதலீட்டு உழைப்புகள் குறைவடையும்.

**43.** பேண்தகு அபிவிருத்தியை மிகச் சிறப்பாக விபரிப்பது

(1) எவ்வித விளைவையும் பொருட்படுத்தாமல் பொருளாதார வளர்ச்சியில் நீண்டகால அதிகரிப்பை ஏற்படுத்துவதாகும்.
(2) சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரினதும் வாழ்க்கைத்தரத்தின் நீண்டகால அதிகரிப்பாகும்.
(3) ஒரு பொருளாதாரத்தின் பொருளாதார இயலளவின் நீண்டகால அதிகரிப்பாகும்.
(4) சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காது வாழ்க்கைத் தரத்தில் நீண்ட காலத்தில் ஏற்படும் முன்னேற்றமாகும்.
(5) பொருளாதாரத்தின் உண்மை உற்பத்தியில் ஏற்படும் நீண்டகால அதிகரிப்பாகும்.

**44.** பொருளாதார வளர்ச்சிக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையிலான வேறுபாட்டை பின்வரும் கூற்றுகளில் எது சிறப்பாக வெளிப்படுத்துகிறது?

(1) பொருளாதார வளர்ச்சி தலைக்குரிய வருமானத்தில் ஏற்படும் ஒரு அதிகரிப்பை மாத்திரம் குறிக்கும் அதேவேளை அபிவிருத்தியில் வருமானம் அல்லாத பரிமாணங்களும் உள்ளடங்கும்.
(2) பொருளாதார அபிவிருத்தியானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியின் மூலம் அளவிடப்படும் அதேவேளை பொருளாதார அபிவிருத்தியானது சமூக குறிகாட்டிகளின் மேம்பாட்டின் ஊடாக அளவிடப்படுகின்றது.
(3) பொருளாதார அபிவிருத்தியானது ஒரு பல்பரிமாண செயன்முறையாகும் அதேவேளை பொருளாதார வளர்ச்சி என்பது உற்பத்தியின் ஒரு குறுகிய அளவையாகும்.
(4) பொருளாதார வளர்ச்சியானது இயல்பாகவே பண்புசார்ந்ததாக அமையும் அதேவேளை பொருளாதார அபிவிருத்தியானது அளவு சார்ந்ததாகும்.
(5) பொருளாதார அபிவிருத்தியானது வெளியீட்டின் குறுங்கால அதிகரிப்பின் மீது கவனஞ் செலுத்தும் அதேவேளை பொருளாதார வளர்ச்சி நீண்டகால கட்டமைப்பு மாற்றங்கள் மீது கவனஞ் செலுத்துகிறது.

**45.** மனித அபிவிருத்திச் சுட்டெண்ணில் வாழ்க்கைத் தரத்தை எடுத்துக்காட்ட பயன்படுத்தப்படும் அளவீடு எது?

(1) கொள்வனவு சக்தி சீராக்கம் செய்யப்பட்ட தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி
(2) தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி
(3) தலைக்குரிய மொத்த தேசிய வருமானம்
(4) கொள்வனவு சக்தி சீராக்கம் செய்யப்பட்ட தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானம்
(5) நிலையான விலைகளில் கணிப்பிடப்பட்ட தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**46.** 2023 ஆம் ஆண்டில் இலங்கையில் நடைமுறை விலைகளின் கீழ் கணிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும் தலைக்குரிய மொத்த தேசிய வருமானமும் காட்டப்படுவது

| | மொத்த உள்நாட்டு உற்பத்தி (பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரில்) | தலைக்குரிய மொத்த தேசிய வருமானம் (ஐக்கிய அமெரிக்க டொலரில்) |
|---|---|---|
| (1) | 96.5 | 4 516 |
| (2) | 96.5 | 3 685 |
| (3) | 83.8 | 3 801 |
| (4) | 83.8 | 3 685 |
| (5) | 76.8 | 3 379 |

**47.** 'அஸ்வெசும' திட்டத்தின் நன்மையாளர்களை அடையாளங் காண்பதற்கு பயன்படுத்தப்படும் பிரதான வழிமுறை
(1) குடும்ப வருமான மட்டம் மாத்திரம்
(2) பல்பரிமாண வறுமைச் சுட்டெண் (MPI) அணுகு முறை
(3) குடும்பத்தின் மாதாந்த மின்சாரக் கட்டணப் பட்டியல்
(4) மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட புவியியல் ரீதியான இலக்கிடல்
(5) குடும்பங்களை அடிப்படையாகக் கொண்ட எழுமாற்று மாதிரி

**48.** A நாட்டின் லோரன்ஸ் வளையியானது B நாட்டின் லோரன்ஸ் வளையிக்கு முற்றிலும் கீழாகக் காணப்படுமாக இருந்தால் அது குறித்துக் காட்டுவது
(1) A நாடு B நாட்டினை விட பெருமளவிற்கு வருமான சமமின்மையைக் கொண்டுள்ளது.
(2) B நாடு A நாட்டினை விட பெருமளவிற்கு வருமான சமமின்மையைக் கொண்டுள்ளது.
(3) இரு நாடுகளும் ஒரே மாதிரியான வருமானப் பங்கீட்டைக் கொண்டுள்ளன.
(4) A நாடு B நாட்டினை விடவும் ஓர் உயர்வான தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டுள்ளது.
(5) B நாடு A நாட்டினை விடவும் அதிக முழு வறுமையினைக் கொண்டுள்ளது.

**49.** BRICS அமைப்பின் உள்ளே தற்போது அவதானிக்கப்படும் ஒரு போக்கு யாதெனில்
(1) ஒரு இராணுவக் கூட்டணியாகத் தொழிற்பட முயற்சிப்பதாகும்.
(2) மேற்குலகின் ஆதிக்கத்திலுள்ள நிதியியல் முறைமைகளுக்கு மாற்றீடாக உருவாக முயற்சிப்பதாகும்.
(3) எல்லா BRICS நாணயங்களையும் சீனாவின் யுவானை மையப்படுத்தி (pegging) பிணைக்க முயற்சிப்பதாகும்.
(4) உலகளாவிய ரீதியில் புதை வடிவ எரிபொருள் பயன்பாட்டினை இல்லாதொழிக்க முயற்சிப்பதாகும்.
(5) BRICS அங்கத்துவ நாடுகளுடன் மட்டும் வர்த்தகத்தை மட்டுப்படுத்த முயற்சிப்பதாகும்.

**50.** இலங்கையில் 1977 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதான பொருளாதாரச் சீர்திருத்தத்தின் நிலைமாற்றமாகக் காணப்படுவது
(1) இறக்குமதிப் பதிலீட்டு உபாயத்திலிருந்து ஏற்றுமதியை மையப்படுத்திய வளர்ச்சி உபாயமாகும்.
(2) சந்தை தாராளவாதத்திலிருந்து வர்த்தக பாதுகாப்புக்கான நகர்வாகும்.
(3) ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட வளர்ச்சியிலிருந்து இறக்குமதிப் பதிலீட்டுக்கான நகர்வாகும்.
(4) தயாரிப்புப் பொருளாதாரத்திலிருந்து சேவையை மையப்படுத்திய பொருளாதாரத்திற்கான நகர்வாகும்.
(5) திறந்த சந்தைப் பொருளாதாரத்திலிருந்து மூடப்பட்ட சோசலிச பொருளாதாரத்திற்கான நகர்வாகும்.

* * *